02.04.2025

OS No: 73/2022

வா.சா.4 திரு. மனோகரன், த/பெ. இராமச்சந்திரன்

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது ஊர் இளையாத்தன்குடியா அல்லது கீழச்சிவல்பட்டியா என்றால் கீழச்சிவல்பட்டி ஆகும். தாவா வழக்குச் சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் அய்யாபட்டி கிராமத்தில் உள்ளது. அய்யாபட்டி கிராமத்திற்கும் கீழச்சிவல்பட்டி கிராமத்திற்கும் இடையே 40 கி.மீ தூரம் இருக்குமா என்றால் 20,25கி.மீ தூரம் இருக்கும். வாதி ராகவிக்கு நான் உறவினரா என்றால் இல்லை, ராகவியின் மாமனார் எனக்கு தெரியும். என்னை சாட்சியாக அழைத்தது யார் என்றால் வாதியின் மாமனார் இராமசாமி அழைத்தார். வாதியின் மாமனார் எனக்கு எப்படி பழக்கம் என்றால் நான் இடங்கள் சம்மந்தமான புரோக்கர் வேலை பார்த்து வருகிறேன், அதனடிப்படையில் பழக்கம். வாதியின் மாமனார் இராமசாமிக்கு வயது என்ன இருக்கும் என்றால் 60 வயது இருக்கும். தாவா சொத்திற்கான சர்வே எண் என்ன என்றால் 28/24 ஆகும். தாவா சொத்து எத்தனை சென்ட் என தெரியுமா என்றால் சரியாக தெரியாது. தாவாச் சொத்திற்கு நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் என்ன இருந்தது என்றால் வீடு ஒன்று இருந்தது, கடை ஒன்று இருந்தது அதைத்தவிர வேறு என்ன உள்ளது என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் உள்ளதாக சொல்லும் வீடு, கடை ஆகியவற்றை யார் கட்டியது என்றால் தெரியாது. தாவாச் சொத்து யாரிடமிருந்து கிரையம் பெறப்பட்டது என்றால் பாப்பம்மாளிடம் இருந்து இராமசாமி கிரையம் பெற்றுள்ளார். இராமசாமி எந்த வருடம் கிரையம் பெற்றார் என்றால் 2005 அல்லது 2006 சரியாக தெரியவில்லை. இராமசாமி கிரையம் வாங்கிட அவருக்கு யார் பணம் கொடுத்தது என்றால் தெரியாது. இராமசாமியை கடைசியாக நான் எப்போது பார்த்தேன் என்றால் 6 மாதங்களுக்கு முன்பு பார்த்தேன். வாதி ராகவியை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்துள்ளேன். பத்திரம் போடுவதற்காக வந்தபோது மட்டுமே ராகவியை பார்த்துள்ளேன்

என்றால் சரிதான். புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது, எதற்காக கொடுக்கப்ட்டது என்றால் 2021ம் வருடம் என நினைக்கிறேன், தேதி ஞாபகமில்லை,மேற்படி புகாரானது இராமசாமியை விசாரணை செய்த போது அவரை அம்மாவும், மகனுமாக அடித்ததார்கள் என்பதற்காக புகார் கொடுக்கப்பட்டது என இராமசாமி என்னிடம் சொன்னார். மேற்படி புகார் சம்மந்தமாக எனக்கு நேரடியாக விபரம் தெரியாது என்றும், இராமசாமி சொல்லித்தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். வழக்கைப் பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றும், சாட்சி கையெழுத்து செய்துள்ள காரணத்திற்காக என்னை சாட்சியமளிக்க கூட்டி வந்துள்ளார்கள் என்றும், வழக்கு விபரம் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.04.02 18:00:08 +0530